பக்கங்கள் 6

# ஈழநாடு
The Eelanaadu

60 சதம்

மலர் 23 சித்திரை 2 ஜ. ஆகிர் 8 இதழ் 63
யாழ்ப்பாணம் செவ்வாய்க்கிழமை 14-4-81

வவனியா மாவட்டத்தில்

## ஆசிரியர்கள் 10 ஆண்டில் ஒய்வுபெற விருப்பம்

### ஜனாதிபதிக்குக் கடிதம்

(புளியங்குளம்)

வவனியா மாவட்டத்தில் 10 ஆண்டுகள் சேவையாற்றிய பல ஆசிரியர்கள் ஓய்வுபெற முன்வந்துள்ளனர்!

இதுதொடர்பாக பல ஆசிரியர்கள் கூட்டாக ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனவுக்குக் கடிதம் எழுதியுள்ளனர்.

பத்துவருட சேவை புரிந்த ஆசிரியர்கள், விரும்பும் பட்சத்தில் பென்சன் பெற ஒழுங்கு செய்யப்படுமென வவனியா மாவட்டக் கச்சேரியில் அண்மையில் நடைபெற்ற மாநாட்டில் பிரதமர் திரு. ஆர்.

(6-ம் பக்கம் பார்க்க)

'குட்டிமணி'யைத் தெரிந்தவர்கள் பொலிஸாருக்கு வாக்குமூலம்!

# வடபகுதிக்கு இராணுவ கொமாண்டோ படை!

## நீர்வேலிக் கொள்ளை: 30 பேர் தகவல் கூறினர்?

(கொழும்பு)

வடக்கில் பயங்கரவாத நடவடிக்கைகளை முழுமையாக முறியடிக்கும் நோக்குடன் இராணுவ கொமாண்டோக்களை வடபகுதிக்கு அனுப்புவது குறித்து பாதுகாப்பு அமைச்சு இப்பொழுது ஆலோசித்துவருவதாகத் தெரிகிறது.

பிரிட்டனில் பயிற்சிபெற்ற பல வீரர்கள் அடங்கிய இக் கொமாண்டோ படைப்பிரிவு, தற்போது விமானக்கடத்தல்களை முறியடிக்கும் திட்டத்தில் ஆயத்தமாக கணேமுல்லையில் நிலைகொண்டுள்ளது.

இப்படையினரை வடபகுதிக்கு அனுப்புவதன்மூலம் வட பகுதியில் பயங்கரவாத நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்தமுடியும் என்று பாதுகாப்பு அமைச்சு எதிர்பார்க்கிறது.

**வடபகுதி குற்றச்செயல்**

இதேநேரத்தில்; வடபகுதியில் அண்மைக்காலத்தில் நிகழ்ந்த குற்றச்செயல்கள் குறித்து பயனுள்ள பல தகவல்கள் பொலிசாருக்குக் கிடைத்துள்ளபோதிலும், இத்தகவல்கள் மீதான பூரண விசாரணை நடைபெற்று, உண்மை நிலையைக் கண்டறிவதற்கு மேலும் சில வாரங்கள் எடுக்கலாமென்று பொலிஸ் வட்டாரங்களில் கூறப்பட்டது.

அண்மையில் நீர்வேலியில் இடம்பெற்ற 81 லட்சம் ரூபா வங்கிக் கொள்ளைசம்பந்தமாக கொள்ளைப் பணத்தை மீட்டுக் கொள்வதில் பொலிசாரும் ஆயுதப்படையினரும் தொடர்ந்து "தேடுதல்" நடத்திவருகின்றனர். பொலிசார் சந்தேகிக்கும் குறிப்பிட்ட நாலு கிராமங்களில் "தேடுதல் வேட்டை" நடத்தும் ஆயுதப் படையினர் பணம் வெளியேறுவதைத் தடுப்பதில் மிகுந்தகண் காணிப்பாக இருக்கும் அதே நேரத்தில்; கொள்ளைப்பணம் மறைக்கப்பட்டிருக்கும் இடம் குறித்து அறிவதில் ஆயுதப் படையினர் தொடர்ந்து தீவிர முயற்சி மேற்கொண்டுவருகின்றனர்.

பொலிசாரின் புலன்விசாரணைகள் தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. ஆயுதப்படையினரின் சோதனைகளும் கடுமையாக மேற்கொள்ளப்பட்டுவருகின்றன.

**நீர்வேலிக் கொள்ளை**

இதற்கிடையில் நீர்வேலி 81 லட்சம் ரூபா கொள்ளைச் சம்பவத்தின்போது குட்டிமணியும் அவ்விடத்தில் இருந்ததாகப் பொலிசாருக்கு இப்போது புதிய தகவல் ஒன்று கிடைத்துள்ளது.

குட்டிமணியும் மற்றும் இரு இளைஞர்களும் கைதானதைத் தொடர்ந்து இவர்களை நேரில் தெரிந்தவர்கள் பொலிசாருக்குத் தகவல் கொடுத்துவருகின்றனராம்.

**வாக்குமூலம்**

குட்டிமணி நீர்வேலிக்

(6ம் பக்கம்பார்க்க)

லண்டனில்

## இனக்கலவரத்தில் 84 பொலிஸார் காயம்!

லண்டன், ஏப். 13

லண்டனில் கறுப்பு இனத்தவர்கள் பெரும்பான்மையாக வாழும் 'பிரிக்ஸ்டன்' மாவட்டத்தில் கடந்த இரவு மீண்டும் ஏற்பட்ட கலவரங்களின்போது 38 பொலிஸார் உட்பட 62 பேர் காயமடைந்தனர் என்றும் இச்சம்பவங்களின் போது 63 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

2-வது தடவையாக நேற்று நடைபெற்ற இனக்கலவரத்தையடுத்து ஸ்தலத்திற்கு விரைந்த சுமார் ஆயிரம் பொலிசார் உடனடியாக நிலைமையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர்.

சனிக்கிழமை இடம்பெற்ற சம்பவத்தின்போது பொலிஸாருடன் கறுப்பு இன வாலிபர்கள் பயங்கரமாக மோதியதாகவும் பல கடைகள், வீடுகள் சூறையாடப்பட்டு 25 கார்களும் கவிழ்க்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது. அப்போது 84 பொலிசார் உட்பட 183 பேர் காயமடைந்தனர். (இ)

யாழ். மாநகர அபிவிருத்தி:

## 50 லட்சம் ரூபா செலவில் 256 வீதிகள் திருத்தம்!

### 1488 பேருக்கு மின் இணைப்பு: யாழ். முதல்வர் தகவல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மாநகர சபை எல்லைக்குள், நாங்கள் பதவியேற்றபின்னர் 7 பெரிய வீதிகளும் 256 சிறிய வீதிகளும் சுமார் 50 லட்சம் ரூபா செலவில் முற்றாக செப்பனிடப்பட்டிருக்கிறது''

யாழ் நகர முதல்வர் திரு. இராஜா விஸ்வநாதன் நேற்றுக்காலை கூட்டிய பத்திரிகையாளர் மகாநாட்டில் மேற்கண்ட தகவலை தெரிவித்தார்.

இம் மகாநாட்டில் உதவி முதல்வர் திரு. சேவியர், சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் வேதாரணியம், மின்சார பொறியியலாளர் திரு. லோகநாதன், மின்சாரப்பகுதி பிரதமலிகிதர் திரு. அ. க. ஏகாதிநாதன் மற்றும் இலாகா உத்தியோகத்தர்கள் கலந்துகொண்டனர்.

மணிக்கூட்டுவீதி, சேக்குளரி வீதி, ஆஸ்பத்திரி வீதி, கஸ்தூரியார் வீதி இ. பொன்னம் வீதி, விக்டோரியா வீதி, சிவன்பண்ணை வீதி ஆகிய 7 பெரிய வீதிகள் முற்றாக செப்பனிடப்பட்டதாக முதல்வர் கூறினார்.

வட்டாரரீதியில் பார்க்கும்போது சில வட்டாரங்களுக்கு ஏன் கூடிய தொகை ஒதுக்கப்பட்டிருக்கிறதென்று நிருபர் கேட்டபோது கடந்தகாலத்தில் அரசியல் காரணமாக இல வட்டாரங்கள் புறக்கணிக்கப்பட்டிருந்ததாகவும் அப்படி புறக்கணிக்கப்பட்ட வட்டாரங்களுக்கு கூடிய தொகை ஒதுக்கப்பட்டிருப்பதாகவும் முதல்வர் தெரிவித்தார்.

முதல்வர் திரு. இராஜா விஸ்வநாதன் மேலும் கூறியதாவது: ''நீர் விநியோகத்திற்கென ஒரு தண்ணீர் பௌசரும், 2 உழவுயந்திரங்களும் சபை வாங்கியுள்ளது. 2 லட்சம் ரூபா செலவில் லொறி ஒன்று வாங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

விரைவில் கிடைக்குமென்று எதிர்பார்க்கப்பட்ட ஒரு லட்சம் கலன் தண்ணீர் இன்னும் கிடைக்கவில்லை. இதுகிடைத்தபின் நீர்நிலைமை ஓரளவு சீராகும்.

எமது ஆட்சிக்காலத்தில் 7,79,681 ரூபா செலவில் 54 புதிய மின்விஸ்தரிப்பு வேலைகள் நடைபெற்றுள்ளது.

''2,74,580 ரூபாவில் 348 புதியதெருவிளக்குகள் எங்கள் ஆட்சிக்காலத்தில் போடப்பட்டிருக்கிறன.

(6ம் பக்கம் பார்க்க)

★ மின்சாரத் தட்டுப்பாட்டை நீக்க

## 2 வெளிநாட்டுக் கம்பெனிகள் உதவ முன்வந்துள்ளன!

(கொழும்பு)

நாட்டில் ஏற்பட்டிருக்கும் மின்சார நெருக்கடியை நிவர்த்திப்பதற்கு வெளிநாட்டு கம்பெனிகள் இரண்டு மின்சாரசபைக்கு உதவமுன்வந்துள்ளன

முக்கிய சில இடங்களில் மின்சாரநிலையங்களை அமைத்து பொதுமக்களுக்கு மின்சாரத்தை விநியோகம் செய்வதற்கு இக்கம்பனிகள் மின்சார சபையிடம் அனுமதி கோரியுள்ளன.

இது குறித்து ஆராய்ந்தமின்சாரசபை இது பற்றி விரிவாக அறிக்கை ஒன்றைச்சமர்ப்பிக்குமாறு அந்த இருகம்பனிகளையும் கேட்டுள்ளது.

இம்முயற்சிக்கு அனுமதி வழங்கப்படும் பட்சத்தில் இக் கம்பெனிகள் அங்கீகரிக்கப்பட்ட கட்டணத்தில் பொது மக்களுக்கு உத்தேச மின்நிலையங்களிலிருந்து மின்சாரத்தை வழங்கும்.

உத்தேச மின்நிலையங்கள் நிலக்கரி அல்லது டீசல் மூலம் இயங்கும். (இ)

# வரி விளம்பரம்


## தேவை

25 வயதிற்குட்பட்ட ஆண்கள் கடைவேலைக்குத் தேவை. விளம்பர இல 8870, மே/பா. ஈழநாடு, யாழ்ப்பாணம். 8870

கச்சேரியில் கடமைபார்க்கும் உத்தியோகத்தருக்கு வீடு சகல வசதிகளுடன் உடனடியாக வாடகைக்குத் தற்காலிகமாகத் தேவை. நேரே தொடர்புகொள்ளவும் க. ஜெயராஜா, உணவு உத்பத்திக் கிளை, கச்சேரி, யாழ்ப்பாணம். 8860

## விற்பனைக்கு

29 சிறி FORD மினி பஸ் பிரயாண வண்டி விற்பனைக்குண்டு. விற்பனைச் சாமான்களும் ஏற்றலாம். தொடர்பு; 24, 2-ம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம். தொலைபேசி இல: 8031 (8863)


## பின்னுறுதிக்கட்டளை பற்றிய அறிவித்தல்

வவுனியா மாவட்ட நீதிமன்றத்தில்

வவுனியா, யாழ்ப்பாணம் வீதியைச் சேர்ந்த, குமாரவேலு ஐயாத்துரை என்பவரின் மரணசாதனம் அற்ற மரணச்சொத்துக்களின் சம்பந்தமான விடயத்தில்.

-மரணமெய்தியவர்

டாக்டர் ஐயாத்துரை ஞானேஸ்வரன், வவுனியா

-மனுதார்

மரணச்சொத்து) 517
நியாயாதிக்கம் )

மேலேயுள்ள இலக்கங்கொண்ட மரணச்சொத்து வழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட இறந்துபோனவரின் மரணச்சொத்தை நிர்வகிப்பதற்காக மேற்சொல்லப்பட்ட நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு, அதில், அதற்கிணங்கப் பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகிறது.

அக்கறையுள்ள ஆள் எவரும் 1981-ம் ஆண்டு வைகாசி மாதம் 20-ந் திகதி முற்பகல் 9-00 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றுன தாக்கப்படலாகாது என்பதற்குக் காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றார்.

1981-ம் ஆண்டு சித்திரை மாதம் 8-ம் திகதி.

நீதிமன்றக்கட்டளைப்படி
(ஒப்பம்)
கே. சதானந்தன்
பதிவாளர்

தயாரித்தது:
(ஒப்பம்)
எம். சிற்றம்பலம்
மனுதாரின்
பதிவுபெற்ற தரணி. 8854

# சிமெந்து விநியோகத்தில் மோசடி?

(யாழ்ப்பாணம்)

நல்லூர் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம், சிமெந்துக் கூட்டுத்தாபனத்திடம் பெரும் தொகை சிமெந்தை கொள்வனவு செய்து, அதனை சங்கக் கிளைகளின் பாவனையாளர் தங்கள் கிளைகளின் மூலம் பெறும் வாய்ப்பினை சில கிளைகளுக்கு இல்லாமல் செய்து வருவதாக புகார் செய்யப்பட்டுள்ளது.

இதுவரை காலமும் வழங்கப்பட்டு வந்த கிளைகளுக்கு சிமெந்து விநியோகம் எவ்வித காரணமுமின்றி திடீரென ரத்துச் செய்யப்பட்டுள்ளதால், பொதுமக்கள் மத்தியில் பெரும் அதிருப்தி ஏற்பட்டுள்ளது. தலைமைப் பீடத்திற்கும் கிளைக் குழுவில் உள்ள சில முக்கியஸ்தர்களுக்குமிடையில் உள்ள போட்டி மனப்பான்மை காரணமாகவே சில கிளைகளில் சிமெந்து விநியோகம் தடைப்படுவதாகக் கூறப்படுகிறது. இதன் எதிரொலியாக சிமெந்து பெற்றுக்கொள்வதில் பாவனையாளர்கள் பெரிதும் கஷ்டப்படுகின்றனர்.


## வெங்கலச் செட்டிகுளம் ப. நோ. கூ. சங்கம் செட்டிகுளம்

## உழுந்து விற்பனைக் கேள்விப் பத்திரம் கோரல்

வெங்கலச் செட்டிகுளம் ப. நோ. கூ. சங்கத்தால் கீழ்வரும் நிபந்தனைகளுக்கமைய உழுந்து விற்பனை செய்ய கேள்விப் பத்திரங்கள் கோரப்படுகின்றது.

1. விற்பனை செய்யப்படவுள்ள உழுந்தின் தொகை 180,000 கிலோ.
2. முடிவுத் திகதி 20-4-1981 திங்கட்கிழமை நண்பகல் 12.00 மணி வரையாகும்.
3. கேள்விப் பத்திரத்துடன் மீளளிக்கும் வைப்புப் பணமாக ரூபா 1000 செலுத்தப்படல் வேண்டும்.
4. கேள்விப்பத்திரங்கள் யாவும் தலைவர், ப. நோ. கூ. சங்கம், செட்டிகுளம் என்ற விலாசத்துக்கு முடிவு திகதிக்கு முன்னர் பதிவு தபாலில் அனுப்பப்படவேண்டும். அனுப்பும் கடித உறையின் இடது பக்க மேல்மூலையில் உழுந்துக் கொள்வனவு கேள்விப் பத்திரம் எனப் பொறிக்கப்பட வேண்டும்.
5. கூடிய கேள்வி கோரியவர் கோரிய முழுப் பெறுமதியின் மூன்றில் ஒரு பங்கினை சங்கத்தால் அனுப்பப்பட்ட கடிதம் கிடைக்கப்பெற்ற மூன்று நாட்களுக்குள் முற்பணமாகச் செலுத்தி பற்றுச் சீட்டை பெறப்படல் வேண்டும்.
6. கேள்வி கோரி ஏற்றுக் கொள்ளப்பட்டு முற்பணம் செலுத்தியவர் முற்பணம் செலுத்தி பதினைந்து நாட்களுக்குள் முழு உழுந்தையும் ஏற்றி முடித்தல் வேண்டும்.
7. உழுந்து சாக்குடன் சேர்த்து மொத்த நிறைக்கே விலை கணக்கிடப்படும்.
8. எந்தவொரு கேள்விப்பத்திரத்தையும் நிராகரிக்கும் முழு உரிமையும் சங்க இயக்குநர் சபைக்கே உண்டு.

செ. ஜெயசந்திரராசா
பொது முகாமையாளர்
8865


# சி. பா. தமிழர் ஐக்கிய முன்னணி போட்டியிடும்

(யாழ்ப்பாணம்)

எதிர்வரும் மாவட்டசபைத் தேர்தலில், வடபகுதியில் உள்ள தாழ்த்தப்பட்ட மக்களின் சார்பில் போட்டியிடுவதற்கு சிறுபான்மைத் தமிழர் ஐக்கிய முன்னணி முடிவு செய்துள்ளது, கடந்த காலங்களில் வடபகுதியில் பல போராட்டங்களைத் தலைமை தாங்கி நடத்திய திரு. எஸ். ரி. என். நாகரத்தினம் தலைமையில் இத்தேர்தல் இயக்கம் செயல்படத் தொடங்கியுள்ளது. வேட்பாளர் பெயர்ப் பட்டியல் திரு. நாகரத்தினத்தை முதலாவது வேட்பாளராகக் கொண்டு தயாரிக்கப்படும்.

நேற்று திரு. நாகரத்தினத்தின் இல்லத்தில் சிறுபான்மைத் தமிழ்ப்பிரமுகர்கள் பலர் அவரைச் சந்தித்து மேற்கண்ட முடிவு எடுக்கப்பட்டது. நாளை புதன் கிழமை யாழ். நகரில் நடைபெறும் சிறுபான்மைத் தமிழ்மக்களின் விரிவான கூட்டத்தில் மேற்கண்ட முடிவுகள் ஊர்ஜிதம் செய்யப்படவுள்ளன. (அ)


## நீர்ப்பாசன திணைக்களம் கிளிநொச்சி பிராந்தியம்

கிளிநொச்சி நீர்ப்பாசன பிராந்திய பிரதிப் பணிப்பாளர் பணிமனையின் கேள்விப் பத்திர சபையின் தலைவரினால் கேள்விப்பத்திரங்கள் அரசாங்க திணைக்களங்களில் 150,000/- ரூபாவுக்கோ அல்லது அதற்குக் கூடிய தொகைக்கோ பதிவுசெய்துள்ள ஒப்பந்தக்காரரிடமிருந்து, முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள கொடிதாங்கியகுள புனரமைப்புத் திட்டத்தில் கிடங்கிடுதலுக்கும், மண்வேலைக்குமாக கேள்விப்பத்திரங்கள் 1981-ம் ஆண்டு மே மாதம் 5-ம் திகதி மு. ப. 10 மணிக்கு முன்பாகக் கிடைக்கக்கூடியதாகக் கோரப்படுகின்றன.

இதற்கான கேள்விப்பத்திரங்கள் 14-04-1981 — 21-04-1981 வரை விநியோகிக்கப்படும். இதுசம்பந்தமான விபரங்கள் முத்தையன்கட்டு நீர்ப்பாசன பொறியியலாளர் காரியாலயத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

இ. அருமைநாயகம்
நீர்ப்பாசனப் பொறியியலாளர்
முத்தையன்கட்டுப் பகுதி
நீர்ப்பாசன
காரியாலயம்,
ஒட்டுசுட்டான்.
1981-04-06. 8827

வியாபாரம் பெருக
விளம்பரம் செய்க


# கப்பலில் வேலை செய்ய பம்பாய் சென்று திரும்பிய இளைஞர் தற்கொலை!

(யாழ்ப்பாணம்)

வெளிநாட்டிற்குக் கப்பலில் வேலை பெற்றுச் சென்றவர் பாதிவழியில் பம்பாயில் நின்று தந்தை கடன்பட்டுக்கொடுத்த 25,000 ரூபாவையும் செலவு செய்தபின்னர் வெறுங் கையுடன் வீடுதிரும்பி மதுவுக்கு அடிமையாகியபின் தற்கொலை செய்து கொண்டார்.

அரியாலையைச் சேர்ந்த கதிரவேலு செல்வராசாவின் (27 வயது) மரண விசாரணையில் மேற்கண்ட விபரம் தெரிய வந்தது.

யாழ். மரண விசாரணை அதிகாரி திரு. எஸ். எஸ். பிரான்சிஸ் மரண விசாரணை நடத்தினார்.

ஆறு மாதத்திற்கு முன்னர் கப்பலில் வேலை பெற்றுச்சென்றவர் பம்பாயில் தங்கியிருந்தாரென்றும் தந்தை கடன்பட்டு அனுப்பிய 25,000 ரூபாவையும் செலவுசெய்துவிட்டு வெறுங்கையுடன் வீடுதிரும்பினார் என்றும் விசாரணையில் தெரியவந்தது.

வீட்டிலுள்ளோருக்கு கப்பல் எரிந்துவிட்டதால் வீடு வந்ததாக அவர் கூறிவிட்டு இரு தினங்களாக மது அருந்திய நிலையில் நேரகாலத்திற்கு சாப்பிடாமல் இருந்தாராம். நேரகாலத்திற்கு ஏன் சாப்பிடவில்லை என்று வீட்டிலுள்ளோர் கேட்டபோது கப்பலிலும் நேரகாலத்திற்கு சாப்பிடுவதில்லை என்று கூறினாராம். சம்பவதினம் நச்சுத்திராவகம் அருந்திய பின்னர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு அங்கு மரணமானார்.

இவர் பம்பாயில் இருந்தசமயம் இவரது தந்தை மரணமானாரென்றும் இதனால் அவர் கவலைப்பட்டதுடன் கடன்களை கொடுக்க முடியாமல் கஷ்டப்பட்டாரென்றும் விசாரணையில் கூறப்பட்டது. விசாரணையின் பின் தற்கொலை என்று தீர்ப்பளிக்கப்பட்டது. (க)

# சைக்கிள் திருட்டு அதிகரிப்பு

(புலோலி)

பருத்தித்துறைப் பகுதியில் சைக்கிள் திருட்டுகள் அதிகரித்து வருவதனால் பொதுமக்கள் பெரும் அச்சமடைந்துள்ளதுடன் பருத்தித்துறைப் பொலிஸ் நிலையத்திலும் முறைப்பாடு செய்துள்ளனர்.

இதனைத் தொடர்ந்து பருத்தித்துறைப்பகுதியில் சைக்கிள் திருட்டை ஒழித்துக்கட்டுவதற்கான துரித நடவடிக்கைகளைப் பருத்தித்துறைப் பொலிஸ்நிலையப் பொறுப்பதிகாரி திரு. எல். திருச்சிற்றம்பலம் மேற்கொண்டுள்ளார். (உ)

# சத்திரசிகிச்சை வசதிகள்

(புலோலி)

பருத்தித்துறை அரசினர் வைத்தியசாலையில் உடற்கூறு சத்திரசிகிச்சைகள் இம்மாதம் 17ம் திகதி முதல் ஆரம்பிக்கப்படவுள்ளன.

இச்சத்திரசிகிச்சை நிலையம் சுமார் 10 வருடங்களுக்கு முன்னர் மூன்று லட்சம் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்டிருந்தது.

அண்மையில் வடபகுதிக்கு விஜயம் செய்த சுகாதார அமைச்சர் திரு. காமினி ஜயசூரியா இச்சத்திர சிகிச்சை நிலையத்தைத் திறந்து வைத்தார். இதனைத் தொடர்ந்து இம்மாதம் 17ம்திகதி தொடக்கம் இங்கு உடற்கூறு சத்திர சிகிச்சைகள் பூரணமாகச் செயற்படத் தொடங்கவுள்ளது. உடற்கூறு சத்திரசிகிச்சைகள் மேற்கொள்வதற்கான இவ்வைத்தியசாலைக்கு சத்திரசிகிச்சை நிபுணர் டாக்டர் எஸ். வேற்பிள்ளை நியமிக்கப்பட்டுள்ளார்.

## தூயதாம் மகிழ்வை நல்காய்

மன்றலம் மலர்கள் தாழும்
மகிழ்வுடன் மலர்ச்சி காட்ட
தென்றலும் தெளிந்து வீச
தெரிவையர் மகிழ்ந்து நின்று
பொன்றிதழ் மனைகள் தோறும்
பொலிவொடு கோலஞ் செய்ய
துன்றிய துர்மதியாம் ஆண்டே
தூயதாம் மகிழ்வை நல்காய்

மன்னிய கல்வி செல்வம்
மகிழ்வொடு பொருந்தும் வாழ்வு
இன்னிசைத் தமிழின் மேன்மை
இறையடி போற்றும் அன்பு
புண்ணியம் தரும் ஈகை
பொருந்திய இரக்கம் சாந்பு
துன்றிடத் துர்மதியாம் ஆண்டே
தூயதாம் மகிழ்வை நல்காய்

— வ. குகசர்மா

## புத்தாண்டே வரவேற்கின்றோம்

அணி மிகும் இந்தப் பாரில்
அண்டெலாம் பசி என்கின்ற
பிணியினில் துடிப்போர் தங்கள்
பேரிடர் நீக்கு தற்கும்
துணிவுடன் உழைக்கும் தோள்கள்
சுகமதை எய்த தற்கும்
மணிநிகர் புத்தாண்டே நீ
வருகென வரவேற்கின்றோம்

ஃ ஃ ஃ ஃ ஃ

தேனிதழ் மாதர் கட்கும்
சிறுவர்க்கும் முதியோர்க்கும்தான்
ஆனதோர் காலமாக
அமைகின்ற புத்தாண்டே நீ
வானதன் கொடையினோடும்
வயல்களின் செழிப்பினோடும்
ஞானியர் ஆசியோடும்
நன்கு நீ வருக ஈண்டே

— புலவர் ம. பார்வதிநாதசிவம்


நீங்கள் விரும்பும் பாடல்கள் அனைத்தையும்
நேரடியாக இசைத்தட்டுகளிலிருந்து
கஸெட்டுகளில் பதிவுசெய்து கொடுக்கிறோம்
துர்க்காஸ் றெக்கோடிங் (B) பார்
68, கே. கே. எஸ். வீதி,
சுன்னுகம். (8867)

படங்களைச் சிறந்தமுறையில்
(F)பிறேம் செய்து
பெற்றுக்கொள்ளவும்.
மற்றும் சகல
கண்ணுடித் தேவைகளுக்கும்
துர்க்காஸ் 68, கே. கே. எஸ். வீதி,
சுன்னுகம். (8866)

### மணிவாக்கு

இன்பம் உன்னை வந்து சேர்வதில் கருத்து வைக்காதே. அது ஏன் உன்னை விட்டுப்போகிறது என்பதை எண்ணிப்பார்.

— அருள்விருந்து.

# நமது நோக்கு

## மட்டக்களப்புப் பல்கலைக்கழகம்

வருகிற அக்டோபர் மாதம் 23-ந் திகதி நாட்டின் சரித்திரத்தில் ஒரு நன்னாளாகும்.

மட்டக்களப்பு பல்கலைக் கழகம் அன்று ஜனாதிபதி திரு ஜே. ஆர். ஜெயவர்த்தனாவினால் உத்தியோக பூர்வமாகத் திறந்து வைக்கப்படும்.

பல்கலைக் கழகக் கல்லூரியா அல்லது வளாகமா என்ற வாதம் கடந்த நிலையில் பரிபூரணமான பல்கலைக்கழகமாக அமைவதென்ற முடிவு நாட்டின் நலன் விரும்பிகள் அனைவருக்கும் அளவில்லாத ஆனந்தம் அளிக்கவல்லது.

யாழ்ப்பாணத்துக்கோர் பல்கலைக்கழகம் வேண்டுமென்று திறமையுடனும், புலமையுடனும் வாதாடியவர் மட்டக்களப்பில் அவதரித்த விபுலாநந்த அடிகள். பரந்த அறிவும், துறவுப் பண்பும், தேசபக்தியும் நிரம்பிய சுவாமிகள் எந்த விடத்தையும் தேசிய ரீதியில் நோக்கும் விசால மனம் படைத்தவர். கல்வியில் முன்னேறிய யாழ்ப்பாணத்துக்குப் பல்கலைக்கழகம் தாமதித்துக் கிடைத்த போதும் அவருடைய பிறப்பிடத்துக்கு அவ்வித தடையின்றி உருவானது அன்னாரின் தவப்பயன் எனலாம். பல்கலைக்கழகம் எங்கிருந்தாலும், அது ஒரு தேசிய ஸ்தாபனம் என்பதை நாம் கருத்திற் கொள்ள வேண்டும். யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் விவகாரங்கள் பற்றிக் கலந்துரையாடும்போது அது யாழ்ப்பாணத்தவரின் சொத்தென்றோ, அல்லது தமிழ் மக்களின் சிறப்புடைமையென்றோ, நாம் கருதுவது சாதாரணமாய்விடுகிறது.

இலங்கைக்குப் பல பிரதேச பல்கலைக் கழகங்கள் தேவைப்படுவது இன்றைய உயர்கல்வியின் வளர்ச்சிக்கொரு சான்றாகும். அதே சமயம் பிரதேச அபிவிருத்திக்கு உதவும் இவ்வித உயர்கல்வி நிலையங்கள் இன, மத, மொழி, நிற வேறுபாடுகளின்றி உயர்கல்விக்கும் ஆராய்ச்சிக்குமுடைய புனித ஆலயமென்பதை நாம் என்றும் நினைவிற் கொள்ள வேண்டும்.

கிழ்மாகாணத்தை இருப்பிடமாகக் கொண்ட பல்கலைக்கழகம் விவசாய பீடத்தின் முக்கியத்துவத்தைச் சிறப்புரிமையாகக் கொள்வது இயல்பு.

நாட்டின் உணவுக்கு—நெல்லுக்கும் பிறவுக்கும்—உயிர் நிலையமாக விளங்குவது கிழக்கு மாகாணம். உணவில் தன்னிறைவு காணும் திட்டத்துக்கு இப் பல்கலைக்கழகத்தின் விவசாய பீடம் தக்க ஆராய்ச்சிப் பணியில் ஈடுபட முடியுமென்பதே மக்களின் எதிர்பார்ப்பு.

விவசாயம் மட்டுமல்ல, பல்வேறு துறைகளிலும் விரைவாக வளர்ச்சியடைய வேண்டுமென்பதே எமது பெருவிருப்பம். கல்வியில் நீண்டகாலம் பின்னின்ற இப்பிரதேசம் இனிமேல் உற்சாகம் அடையுமென்பதில் ஐயமில்லை. அங்குள்ள பாடசாலைகள், கல்லூரிகள் துரிதமாக வளரும் வாய்ப்பும் அதிகரிக்கும்.

## அபிவிருத்தியின் உயிர்

'அழகிய பொருளால் என்றும் அடைவது ஆனந்தமே' என்று பாடியவர் ஆங்கிலப் புலவர் கீட்ஸ்.

அழகைத் தமிழ்மக்கள் எங்கு கண்டனர்?

கண்ணினைக் கவரும் அழகுக்கும் மேலாக, கருத்தினைக் கவரும் அறிவுக்கே முதன்மை அளித்தனர் தமிழ் மக்கள். இந்தச் சிறப்புப் பண்பை நாம் இவ்வளவுக்கு நாட்டின் வேறெந்த இனத்தவரிடமும் காண்பதில்லை.

பிச்சை புகினும் கற்கை நன்றே என்ற அடியில் ஏட்டுப் படிப்பைத்தான் நல்லதென்று சொல்லவில்லை. வாழ்க்கைக்கு அறிவு அழகு ஊட்டுவதென்றால் நிச்சயம் வறுமையை, நோயை, அறியாமையால் வரும் இன்னல்கள் அனைத்தையும் நீக்க வல்ல சக்தியாகவே கருதி, வெள்ளைக் கமலத்தில் வீற்றிருக்கும் கலைமகளை வணங்கி வந்தனர்.

இதன் விளைவாகவே நாட்டின் தமிழ்மாநிலங்களில் சிறப்பாக யாழ்ப்பாணத்தில், ஆரம்பபாடசாலைகள், கனிட்ட பாடசாலைகள், சிரேட்ட கல்லூரிகள், தொழிற் கல்வி நிலையங்கள், தொழில் நுட்பக் கல்லூரிகள், ஆசிரியர் பயிற்சிக் கழகங்கள் இடத்துக்கிடம் காணப்படுகின்றன.

நாட்டுக்கு - ஏன், உலகுக்குந்தானும் - உதவிய பெரியார்கள் அனைவரும் கல்வியால் உயர்ந்தவர்களே. எனவே கல்வி இப்பகுதி மக்களின் உயிர்.

ஆனால், இன்றைய நிலை என்ன? அரசியல் விவாதத்தில் கொண்டையைக் கிழிக்கும் தலைவர்கள் மக்களின் அபிப்பிராயங்கள் பறிபோவதைக் கண்டும் வாளாவிருக்கின்றனர்.

தியாகத்தின் உச்சநிலையில் உருவான சைவ, கிறிஸ்தவ பாடசாலைகளைக் கையேற்ற அரசு, மாறும் உலகில், தனது பொறுப்பை நியாயமாக நிறைவேற்றத் தவறுகிறது.

பிரபல கல்லூரிகள் தேடுவாரற்ற நிலை! ஆசிரியர் பற்றாக்குறை! நிர்வாகம் அசமந்தப்போக்கு! பாடசாலைச்சமுதாயம் வேண்டா வெறுப்பு. இதன் முடிவு, திட்டமிட்டதைப் போன்று நாட்டில் இப்பிரதேசம் முதலிடம் வகித்த நிலை போய், முன்னேற்றம் தடைப்பட்டு தேங்கிக் கிடக்கும் நிலை. உண்மையில் இது பரிதாபகரமானது.

கல்வி வளர்ச்சியன்றி கட்டிட வளர்ச்சி அபிவிருத்தியாகாது.

"வீட்டுவசதி அளித்தால்

## கிராமப் பாடசாலைகளில் கற்பிக்க ஆசிரியர்கள் முன்வருவார்கள்"

(மன்னார்)

"கிராமப்புறப் பாடசாலை ஆசிரியர்களுக்கு குடியிருக்க வீட்டு வசதிசெய்துகொடுக்க வேண்டும் இப்படி வசதி செய்துகொடுத்தால் ஆசிரியர்கள் கிராமப்புறங்களில் கடமையாற்றத் தயங்கமாட்டார்கள்"

இவ்வாறு இலங்கை தமிழர் ஆசிரியர்சங்கத்தின் மாந்தைக் கிளை வருடாந்தக்கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது இக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட ஏனைய தீர்மானங்கள் வருமாறு:

"ஆசிரியர்களின் வருடாந்த சம்பள உயர்வுக்குத் தற்போதுள்ள பொர்சுமுறையை நீக்கி பழையமுறையைக் கையாளவேண்டும்.

"ஆசிரியர்களின் ஆகக் குறைந்த சம்பளம் 1500 ரூபாவாக இருத்தல்வேண்டும்.

"பயிற்றப்பட்ட ஆசிரியர் பெறக்கூடிய அதிஉயர்ந்த பதவி 3ம்தர அதிபர் பதவியாகும். ஆதலால் 3ம் தர அதிபர் வெற்றிடங்களை 75 வீதம் பயிற்றப்பட்ட ஆசிரியர்களால் நிரப்புதல் வேண்டும்.

"45 வயதுக்குமேல் 20வருட சேவைக்குப் பின் விரும்பினால் 5 வருடம் சம்பளத்தோடு இளைப்பாற வசதிசெய்தல் வேண்டும்"

(அ)

## "மாணவர்களின்விரக்தியால் குழப்பங்கள் ஏற்படுகின்றன!"

### உடுப்பிட்டி எம் பி. கருத்து

(இமையாணன்)

"மாணவர்களை முக்கிய குறிக்கோளாக வைத்துத் தீட்டப்படவேண்டிய கல்வித்திட்டம், மாணவர்களை மறந்த நிலையில் தீட்டப்படுவதனால் மாணவர்கள் விரக்தி மனப்பான்மையடைகிறார்கள். இதனால் நாட்டில் குழப்பங்கள் ஏற்படுகின்றன"

இவ்வாறு உடுப்பிட்டி எம். பி. திரு. த. இராசலிங்கம் உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரியில் நடைபெற்ற பெற்றோர்தின விழாவின்போது கூறினார்.

இரண்டு லட்சம் ரூபா செலவில் கட்டி முடிக்கப்பட்ட மேல்மாடிக்கட்டிடத்தை திரு. இராசலிங்கம் முதலில் திறந்து வைத்தார். தொடர்ந்து தேநீர் விருந்துபசாரம் அளிக்கப்பட்டது. அதனைத்தொடர்ந்து கல்லூரியின் அதிபர் திரு. என். சச்சிதானந்தன் தலைமையில் நடைபெற்ற இப் பெற்றோர்தினவிழாவில் அவர்மேலும் கூறியதாவது:

"சமுதாயத்தின் உயர்ச்சிக்கும் முன்னேற்றத்திற்கும் வளர்ச்சிக்கும் பாடுபடுவது அவசியம். அதேபோல் சமுதாயத்துடன் நெருங்கிய தொடர்புடைய பாடசாலையின் வளர்ச்சியிலும் அக்கறை காட்டவேண்டும். பாடசாலையில் தொழிற்கல்வியில் மாணவர்களும் பெற்றோர்களும் ஆர்வம்காட்டவேண்டும்.

உடுப்பிட்டி வட்டாரக்கல்வி அதிகாரி திரு. வி. கே. ஈசுவரபாதம் பேசும்போது "இன்றைய சமுதாயத்தில் நேர்மையில்லை. மாணவர்கள் நேர்மையானவர்களாக வாழவேண்டும். பொய்சொல்லக்கூடாது. கொடுக்கப்பட்ட வேலைகளைச் சரிவர உடனுக்குடன் திறம்படச்செய்யவேண்டும்" என்றார்.

இவ்விழாவின்போது அகில இலங்கை விஞ்ஞானமுன்னேற்றக்கழகத்தினரால் வடபகுதி ரீதியாக நடாத்தப்பட்ட விஞ்ஞானப்பேச்சுப் போட்டியில் திறமைச்சான்றிதழ் பெற்ற இக்கல்லூரி மாணவனான என். சிதம்பரதேசிகனுக்குரிய சான்றிதழை உடுப்பிட்டி எம். பி. இராசலிங்கம் வழங்கினார்.

(கு)

## மக்கள் கருத்து

### மட்டுவில் சிவன்கோவில்

ஈழநாட்டிலே குறிப்பாக யாழ்ப்பாணத்திலே பிரசித்திபெற்ற சிவாலயங்களில் மட்டுவில் கல்வம் சிவசந்திமௌலிசர் ஆலயமும் ஒன்றாகும். இவ்வாலயத்தின் சிவலிங்கம் துரதிஷ்டவசமாக கடந்த 1973 ம் ஆண்டு ஜனவரிமாதம் 30ம் திகதி யாரோ கள்வரினால் உடைக்கப்பட்டது. அதன் பின் இவ்வாலயம் பாலஸ்தாபனம் செய்யப்பட்டு உற்சவ மூர்த்திக்கே பூசை, வழிபாடு செய்துவருதல் யாவரும் அறிந்ததே. இவ்வாறாக சுமார் 9 ஆண்டுகள் கடந்தோடிவிட்ட போதிலும் பொதுமக்களோ நிர்வாகிகளோ கும்பாபிஷேகம் பற்றிய எதுவித நடவடிக்கைகளிலும் ஈடுபடுவதாகப் புலப்படவில்லை.

ஆயினும் கடந்த 8-11-77ல் வெளியான "ஈழநாடு" இதழில் நிர்வாகி ஒருவர் தாம் கும்பாபிஷேகம் செய்வதற்கான சகல ஒழுங்குகளும் வசதியாக இருப்பதாகவும், பிரதிஷ்டசெய்வதற்கு சிவலிங்கம் மட்டும் தேவை என்றும் தகவல் ஒன்று வெளியிடப்பட்டிருந்தது. அக்குரலும் இன்று அணைந்துவிட்டது. இன்று நாம் அனைவரும் இணைந்து சைவாபிமானிகளையும்பெரியார்களையும் அழைத்து ஆலோசனை கேட்கவேண்டும்.

இத்தலத்தின் விசேடம்பற்றி உரையாசிரியர் ம. க. வேற்பிள்ளையின் ஈழமண்டலசதகம் அச்சுவேலி பிரம்மஸ்ரீ ச. குமாரசாமிக்குருக்கள் இயற்றிய சைவப்பிரகாசிகை, மட்டுவில் கல்வம் வீரகத்திப்பிள்ளை கும்பாபிஷேகமலர்—1976 ஆகிய வற்றிற்காணலாம்.

இத்தகைய மாண்புமிக்க சிவஸ்தலத்திற்கு சிவலிங்கப் பிரதிஷ்டைசெய்து கும்பாபிஷேகம்செய்ய மேன்மேலும் காலம் தாழ்த்தாது முன்வருமாறு சைவ அன்பர்களைப் பகிரங்கமாகவும் பணிவாகவும் அழைக்கின்றோம்.

காசிநாதர் சிவபாலன்;
மட்டுவில் வடக்கு,
சாவகச்சேரி.

## நாடும் நடப்பும்....

போறதுதான் போகிறது, சும்மா போகக் கூடாதா?

ரௌத்ரி ஆண்டு போகும் நேரத்தில் ஒரு சிந்தனைச் சிற்பியையும், பரமாச்சார்ய சுவாமிகளையும் தமிழ்மக்களிடமிருந்து பறித்தெடுத்துவிட்டா போக வேண்டும்!

நாவலர்பெருமான் சமயப் பணியை ஆரம்பித்த வண்ணை சிவன்கோவிலேயே பரமாச்சாரியசுவாமிகள் தமது பதினெட்டாம் வயதில் சமயப் பணியை ஆரம்பித்தார். பிரம்மஸ்ரீ ஸி. எஸ். எஸ். மணி ஐயராக இருந்து மணிபாகவதராகப் போற்றப்பட்டு பின்னர் முத்தமிழ்மணி எனப்பாராட்டப்பெற்றவர். நல்லையில் ஞான சம்பந்தர் ஆதீனத்தை அமைத்துத் துறவறம் பூண்டு தம்பிரான் சுவாமிகளாகி பின்னர் ஞானசம்பந்த பரமாச்சார்ய தேசியசுவாமிகளாகப் பட்டம்பெற்றவர்.

வண்ணை சிவன் கோவில் வடக்குவீதியில் தனியாக ஒரு ஒலைக்கொட்டிலில் அன்றைய மணிஐயர் சிவதாண்டவம்பழக்கிக் கொடுத்ததுடன் நாடகமும் தயாரித்திருக்கிறார். ஓவியங்களும்இக்கொட்டிலிலிருந்து வரைந்திருக்கிறார்!

மேடையில் மணி ஐயர் ருத்ர தாண்டவம் ஆடிய காட்சியைக் கண்டவர்கள் இன்று நினைத்தாலும் அந்தக்காட்சி அவர்கள் கண்முன் வந்து நிற்கும். அவரிடம் சிவதாண்டவம் பழகி மேடையில்தோன்றியவர்கள் பலர். அவர்களில் ஒருவர் திரு. பாப்பையாவின் மகன் ஸ்ரீஸ்கந்தராசா. இந்துக்கல்லூரியில் படித்தவர்; சிறந்த உதைபந்தாட்டவீரர்!

மணிபாகவதராக இருந்த போது கதாப்பிரசங்கத்துறையில் பல புதுமைகளைச் செய்தவர். ஒரு சமயம் வண்ணை ஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமாள் கோயிலில் கதாப் பிரசங்கம் நிகழ்த்திக்கொண்டிருந்தார். என்ன பொருள் என்பது இப்போது எனக்கு நினைவில்லை. அந்தப்பிரசங்கத்தின் போது மேனகைவரும் கட்டம் பற்றி வர்ணித்த மணிபாகவதர் காலில் சலங்கை கட்டி சால்வையை மேலாடையாகப் போர்த்தி மேனகைவரும் அழகை அபிநயம் பிடித்து நடனமாடிக்காட்டினார்!

தம்பிரான்சுவாமிகளின் பிரசங்கத்துக்குத்தமிழ்நாட்டிலும் பெரும்மதிப்பு. தமிழ் நாட்டில் கதாப்பிரசங்கத்தில் பெரும் புலிகள் இருந்தாலும் அவர்களைப் போல் தம்பிரான்சுவாமிகள் "அவா என்ன சொன்னா: அவாள் வந்ததும்" என்ற அம்மாமித்தமிழ் தம்பிரான் வாயில் வருவதில்லை, தூயதமிழும் சுத்தமான இசையும் ஒரு விரிவுரையாகவே இருக்கும்.

கடைசிப்பந்தி என்பதற்குத் தம்பிரான் கொடுத்த ஒருவிளக்கம் கடைசிப்பந்தி என்றால் கடைச்சிப்பந்தி! கடைச்சிப் பந்திக்குக்கடைசிப்பந்திதானே கிடைக்கும்!

தம்பிரான் சுவாமிகள் ஒருநாள் நல்லூர் வீதியில் பஜனை செய்துகொண்டு போனார். அதைப் பார்த்துக் கொண்டு நின்ற யாழ்.நகர உதவி அரசாங்க அதிபராக இருந்த (இப்போது மட்டக்களப்பில் உதவித்தேர்தல் ஆணையாளராக இருக்கிறார்) திரு. ஆர். யோகநாதனின் மகள் "அப்பா நாங்கள் அப்போது பார்த்த நாவலர் வெறுங்காலுடன் நடந்து போகிறார்" என்று கூறியதைக் கேட்டு தந்தை பிரமித்தார்!

நாவலருக்கும் பரமாசாரிய சுவாமிகளுக்கும் அவ்வளவு உருவ ஒற்றுமை!

'நாவலர் பெருமான்' திரைப் படம் தயாரிப்பதற்குச் சிலர் முயற்சி செய்தனர். 'சொக்கன்' திரைக்கதை வசனம் எழுதுவதாக இருந்தது.

(4ம் கலம் பார்க்க)

(5ம் கலத் தொடர்ச்சி)
தம்பிரான் சுவாமிகளே நாவலர் பெருமானாக நடிக்கவும் சம்மதித்திருந்தார். ஆனால் அந்த முயற்சி கைகூடவில்லை!

இனி எங்கே அந்த மணிக்குரலைக் கேட்கப்போகிறோம்!

நேற்று முன் தினம் ஸ்ரீராம நவமி. இலங்கை வானொலி காலை ஆறு மணிக்கு ஒலிபரப்பிய சைவநற்சிந்தனையின்போது பரமாசார்ய சுவாமிகள் ஸ்ரீராமநவமிபற்றிக் கொடுத்த விளக்கத்தை ஒலிபரப்பினார்கள். அந்தக்குரலைக் கேட்டபோது கண்கலங்கியது!

ராமாயணம், பாகவதப்பிரசங்கங்களுக்குச் சிலசித்தாந்தங்கள் எதிர்ப்புத் தெரிவித்தன. சுவாமிகள் 'ராம' என்பதற்குக் கொடுத்த விளக்கத்தின் பின்னர் இந்த எதிர்ப்புக் குரல் சிறிது ஓய்ந்ததாயினும் முற்றாக நீங்கவில்லை. சுவாமிகள் அதைப்பற்றிக் கவலைப்படவில்லை. தமது பணியை சிவபதமடையும்வரை செய்தே வந்தார்.

-ஊர்சுற்றி

ஒரு புதிய பகுதி! விபரம் நாளை

## இப்படியும் நடக்கிறது

'ஒபெக்' நாடுகளின்

## பொருளாதார ஆதிக்கம் முறியடிக்கப்படவேண்டும்

### சர்வதேச பொருளாதார சங்கம் அறிக்கை

வாஷிங்டன் ஏப் 13.

'ஒபெக்' நாடுகளின் பெற்றோலிய ஏகபோக ஆதிக்கத்தை முறியடிக்கும் வகையில் சர்வதேச பொருளாதாரக் கொள்கை வகுக்கப்படவேண்டும்.

மேற்கண்டவாறு வாஷிங்டனிலுள்ள சர்வதேச பொருளாதாரசங்கம் வெளியிட்டுள்ள அறிக்கையொன்றில் தெரிவித்துள்ளது

அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

"உலக பொருளாதாரத்தை தமது கைகளுக்குள் வைத்திருக்க ஒபெக் நாடுகள் முயன்று வருகின்றன. இம்முயற்சியை உலகநாடுகள் முறியடித்தல் வேண்டும்.

ஒபெக் நாடுகளின் சந்தை ஆதிக்கத்தினால் உலகில் எண்ணெபில்லாது போகும் அபாயம் ஏற்பட்டுள்ளது. இந்நாடுகளின் வர்த்தக ஏகாதிபத்தியத்தினால் உலகில் பொருளாதார மந்தநிலையும், பணவீக்கமும், அரசியல் குளறுபடிகளும் ஏற்பட்டுள்ளது. (வெ)

---

றொடீஷிய மாஜி பிரதமர்

## இயன்சிமித்தின் முன்னணிக் கட்சி உறுப்பினர் திடீர் ராஜினாமா!

சாலிஸ்பரி, ஏப் 13.

சிம்பாப்வே றொடீஷியாவின் முன்னாள் பிரதமர் திரு. இயன் சிமித்தின் முன்னணிக் கட்சியின் முக்கிய உறுப்பினரொருவர் அக்கட்சியிலிருந்து இராஜினாமாச் செய்துள்ளார்.

திரு. அன்றேகோலன் என்ற உறுப்பினரே இராஜினாமாச் செய்தவராவார். றொடீஷியாவில் கறுப்பு இனத்தவர்களுக்கும், வெள்ளையருக்குமிடையே ஒற்றுமை நிலை நாட்டப்பட வேண்டுமென்று முன்னணிக் கட்சி வலியுறுத்திடதே இவரின் ராஜினாமாவுக்குக் காரணமெனக் கூறப்படுகிறது.

இவரின் ராஜினாமாவைக் கட்சி உறுப்பினர்கள் பலர் ஆதரித்துள்ளனர். இயன் சிமித்தின் கட்சிக்கு எதிராகப் புதிய கட்சியொன்றை ஆரம்பிக்கப் போவதாக திரு அன்றே கோலன் தெரிவித்துள்ளார்.

தனது புதிய ஜனநாயகக் கட்சி இந்த வார முற்பகுதியில் ஆரம்பிக்கப்படுமென்றும் அது றொடீஷியாவில் இரண்டு ஸ்தானங்களுக்கு நடைபெறவுள்ள இடைத்தேர்தலில் இயன் சிமித்தின் முன்னணிக் கட்சியை எதிர்த்துப்போட்டியிடுமென்றும் திரு. கோலன் தெரிவித்துள்ளார்.

றொடீஷியாவில் வெள்ளையர்களுக்கு எதிராக கறுப்பு இனத்தவர்கள் கெரில்லா போர் முறைகளை மேற்கொண்ட போது அவர்களை அடக்க ஆயுதங்களைதயாரித்து றொடீஷியா அரசாங்கத்திற்கு வழங்கும் பணியில் அன்றே கோலன் ஈடுபட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (வெ)

---

## "நல்லவற்றை நாடிச்செய்ய தூண்டும் சக்தியே அறிவு"

### — ஈழத்துச் சிவானந்தன்

(புங்குடுதீவு)

"நல்லவற்றைநாடிச்செய்யத் தூண்டும் சக்தியே அறிவு தீது விலக்கி நல்லதை நினைக்கத் தூண்டுவது அறிவு என்றார் திருவள்ளுவர். தீயவை, தீய பயத்தலால் தீயவை தீயிலும் அஞ்சப்படவேண்டியவை என்று இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் வாழ்க்கை நெறிவகுத்த திருவள்ளுவனார் கூறியுள்ளார். இதனை இந்த நூற்றாண்டு இளைஞர்கள் இதயங்களில் இருத்திக்கொள்ள வேண்டும்"

இவ்வாறு புங்குடுதீவு வீரம்புளியடி சங்கத்தார்கேணி திருவள்ளுவர் சேவாமன்றத்தினை தொடக்கி வைத்து தலைமையுரை நிகழ்த்திய புலவர் ஈழத்து சிவானந்தன் கூறினார்.

மன்றத்தின் மங்கள விளக்கினை ஏற்றி உரைநிகழ்த்திய வே. க. சோமசுந்தரம் உழைப்பும் உண்மையான சிந்தனையுமே இன்றைய இளைஞர்களுக்கு மிகுதியும் தேவையானவை. இவற்றினை ஓடியோடித் தேடிச் சேர்த்துக் கொள்ளவேண்டும்" என்றார். (இ)

---

## கிளர்ச்சியைக் கைவிட முடிவு

புதுடில்லி, ஏப் 13

குஜராத்தில் அரசுக்கு எதிராக வைத்திய மாணவர்கள் கடந்த பல நாட்களாக நடத்தி வந்த கிளர்ச்சியை கைவிட முடிவு செய்துள்ளனர். (வெ)

---

## உலக இந்து மகாநாடு

காட்மாண்டு ஏப் 13

உலகஇந்து மகாநாடொன்று நேபாளத்தில் ஆரம்பமாகியுள்ளது. நான்கு நாள் நடைபெறவுள்ள இம்மாநாட்டை நேபாள மன்னர் பிரேந்திரா ஆரம்பித்து வைத்தார்.

இந்தியா, இலங்கை, பங்களாதேஷ், தாய்லாந்து, பிலிப்பைன்ஸ், மலேசியா ஆகிய நாடுகளின் பிரதிநிதிகள் இம்மாநாட்டில் கலந்து கொள்கிறார்கள். (வெ)

---

## யுத்த நிறுத்த அறிகுறி

லண்டன், ஏப் 13.

ஈராக் - ஈரான் யுத்தத்தை சமரசமாகத் தீர்த்து வைக்கும் பொருட்டு இவ்விரு நாடுகளுக்கும் விஜயம்செய்த அணிசேரா நாடுகளின் சமரச தூதுக்குழு பேச்சுவார்த்தைகளை முடித்துக்கொண்டு திரும்பியுள்ளது.

ஈரான் - ஈராக் யுத்த நிறுத்தத்திற்கான அறிகுறிகள் காணப்படுவதாகவும், இரு நாடுகளின் துருப்புக்களும் ஆக்கிரமிப்புச் செய்துள்ள பகுதிகளிலிருந்து வெளியேறவேண்டுமென்றும் இக்குழு தெரிவித்துள்ளது. இக்குழுவிற்கு இந்திய வெளிநாட்டமைச்சர் திரு. நரசிம்மராவ் தலைமை வகித்தார். (வெ)

---

## பஸ் விபத்து: 46 பேர் பலி!

புதுடில்லி ஏப் 13.

ஆந்திரா பிரதேசத்தில் இடம்பெற்ற பயங்கர பஸ் விபத்தொன்றில் 46 பேர் பலியானார்கள்.

40 பேர் ஸ்தலத்தில் பலியானார்கள். ஆறு பேர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டபின்னர் பலியானார்கள். பலருக்குக்காயமும் ஏற்பட்டுள்ளது.

இப் பஸ்ஸில் 80பேர் பிரயாணம் செய்ததாகவும், மலைப்பிரதேசம் ஒன்றில் இப் பஸ் திரும்பியபோது குடைசாய்ந்ததால் இவ்விபத்து ஏற்பட்டதாகக் கூறப்படுகிறது.

பஸ்ஸில் பிரேக் போதாததும் விபத்துக்குக் காரணமென்று தெரிவிக்கப்பட்டது.

---

## "சைவ உலகுக்கு பேரிழப்பு"

(யாழ்ப்பாணம்)

"வேதநெறி தழைத்தோங்க மிகுசைவத்துறைவிளங்கப் பூதபரம்பரை பொலியப் புனிதவாய் மலர்ந்தழுத சீதவளவயற் புகலித் திருஞானசம்பந்தப் பெருமானின் திருநாமத்துடன் ஆதீனம் அமைத்துச் சைவப் பெரும்பணி புரிந்த சுவாமிகளின் மறைவு எமக்கு மாத்திரமல்ல. சைவ உலகுக்கு சைவசமயிகள் வாழ்கின்ற சகல நாடுகளுக்கும் ஈடுசெய்ய முடியாததொரு பேரிழப்பாகும். இயல், இசை, நாடகம் என்ற முத்தமிழ்க்கலைகளிலும் சிறப்புற்றுத் திகழ்ந்த சுவாமிகள், தொண்டையினால் தொண்டுசெய்து சைவத்தை வளர்த்தவர்கள். சுவாமிகள் இன்று பரிபூரணம் அடைந்துவிட்டார்கள் சுவாமிகள் ஆற்றிவந்த இப்பெருந்தொண்டைத் தொடர்ந்து, இளவரசு சுவாமிகள் நிகழ்த்துவார்கள் என்பதில் சந்தேகமில்லை. குருவருளைப் பிரார்த்தித்துச் சாந்திபெறுவோமாக"

இவ்வாறு நல்லை ஞானசம்பந்தர் ஆதீன குருமகா சந்நிதானம், ஸ்ரீலஸ்ரீ பரமாச்சாரிய சுவாமிகளது பரிபூரணத்தை பொட்டி யாழ். திருமுறை மன்ற அமைப்பாளர் திரு. இ. கிருஷ்ணமூர்த்தி வெளியிட்டுள்ள அனுதாபச்செய்தியில் குறிப்பிட்டுள்ளார். (இ)

---

## நியமனம்

(மண்டூனை)

மட்டக்களப்பு கச்சேரியில முதலாம்தரஎழுதுவினைஞராக கடமையாற்றிய திரு. அழகரத்தினம் ஏறுவூர்ப்பற்று உதவி அரசாங்க அதிபராக நியமிக்கப்பட்டுள்ளார்.

---

## சோமுவுக்கும் கிருஷ்ணனுக்கும் கௌரவ விருது

சென்னை, ஏப். 13.

தமிழக அரசவைக் கலைஞரும் பிரபல சங்கீத வித்துவானுமாகிய எஸ். சோமசுந்தரம் நாதஸ்வர வித்துவான் நாமகிரிப்பேட்டை கே கிருஷ்ணன் ஆகிய இருவருக்கும் சேலம் தமிழ் சங்கம் "முத்தமிழ் கலைமாமணி" என்ற விருதை வழங்கிக் கௌரவித்துள்ளது.

தமிழக சட்டப் பேரவைத் தலைவர் திரு. ராஜாராம் தலைமையில் நடைபெற்ற விழா ஒன்றில் நிதி அமைச்சர் திரு. இரா. நெடுஞ்செழியன் இக்கௌரவ விருதுகளை வழங்கினார். (இ)

---

## ஈழத்தமிழ் மக்களுக்கு ஈடில்லா இழப்பு

### 'அமிர்' அஞ்சலி உரை

(யாழ்ப்பாணம்)

'ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாததேசிக ஞானசம்பந்தபரமாசார்ய ஸ்வாமிகள் திடீரென்று இறைவனால் அழைத்துக்கொள்ளப்பட்டது, ஈழம்வாழ் தமிழ் பேசும் மக்கள் அனைவருக்கும் ஈடு செய்யமுடியாத பேரிழப்பாகும். சைவத்திலும் தமிழிலும் திளைத்து நமது நாடுகளிநடம் புரிந்த கலைமகளின் கடாட்சத்தினால் எங்கெங்கு சென்று சுவாமிகளுடைய உரைகள் கதாப்பிரசங்கங்கள் இடம்பெற்றனவோ அங்கெல்லாம் இலங்கையில் வாழுகின்ற தமிழ் மக்களுக்கு ஒரு தனிச் சிறப்பைத் தேடித்தந்த சுவாமிகளின் மறைவு எங்களால் நினைத்துக்கூடப் பார்க்கமுடியாததாகும்."

அவர் தமது உரையில் மேலும் கூறியதாவது:

நல்லை ஞானசம்பந்தர் ஆதீன மண்டபத்தில் நடந்த அஞ்சலிக் கூட்டத்தில் உரையாற்றிய எதிர்க்கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம் மேற்கண்டவாறு கூறினார்.

சுவாமிகளுடைய உள்ளம் குழந்தை உள்ளம் ஆனால் அதற்குள்ளே புதைந்து கிடந்தது ஆழ்ந்த அறிவு. சமயத்துறையில் தமிழுக்கு ஆற்றிய தொண்டு என்றென்றும் நினைக்கக்கூடியது. ஆதீனத்தை நிறுவி இப்பகுதியில் ஒரு சமய நிலையமாக சைவமும் தமிழும் வளர்க்கும் நிறுவனமாக ஆக்கிவைத்திருப்பது வருங்காலமக்களுக்குஇட்டுச்சென்ற பெரும் சொத்தாகவே நான் கருதுகின்றேன். சுவாமிகள் விட்டுச்சென்ற பணியையும் இந்த ஆதீனத்தையும் அவர் ஆற்றிவந்த சைவத் தமிழ்ப் பணியைத் தொடர்ந்து சிறப்புற நடாத்தி அவருடைய நினைவை என்றும் எங்களுடைய உள்ளங்களில் நாட்டி அவர் வழியிலே நாமும் செல்வோம் என்பதை மாத்திரம் நான் இங்குகூறி சுவாமிகளின் நாமம் தமிழ் மக்களுடைய நாவில் குடியிருக்கும் என்று நான் நம்புகின்றேன்' என்றார். (சி-இ)

---

## தே. எண்ணைக் கலனில் கைக்கடிகாரங்கள்!

### தலைமன்னாரில் சிக்கின

(மன்னார்)

தேங்காய் எண்ணைக்கலனில் தண்ணீர் நிரப்பி அதனுள் கல்குலேட்டர்களையும் கைக்கடிகாரத்தையும் மறைத்து வைத்து இந்தியாவுக்கு கடத்திச்செல்ல முயன்ற இலங்கையர் ஒருவர் தலைமன்னார் சுங்க அதிகாரிகளிடம் சிக்கினார்.

கப்பல் மார்க்கமாக இந்தியாவுக்குச் செல்வதற்காக தலைமன்னார் துறைமுகத்திற்கு வந்திருந்த நபர்மீது சந்தேகம் கொண்ட தலைமன்னார் சுங்க அதிகாரிகள் பிரயாணியின் பொருட்களைச் சோதனையிட்டனர்.

அப்போது தேங்காய் எண்ணெய்க் கலனில் தண்ணீர் நிரப்பப்பட்டு அதனுள் கல்குலேட்டர்களும், கைக்கடிகாரமும்மறைத்து வைத்திருப்பதைக் கண்டுபிடித்தனர்.

இச் சம்பவம் தொடர்பான விசாரணை முடிவடைந்ததும் கடத்தல் பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டு 1800 ரூபா அபராதமும் விதிக்கப்பட்டது.

---

## 9 மாணவர்கள் சாதனை

(கொழும்பு)

அண்மையில் வெளியான க. பொ. த (சாதாரணம்) புதிய பாடத்திட்டப் பரீட்சையில் கொழும்பு றோயல் கல்லூரியில் ஒன்பது மாணவர்கள் எட்டுப் பாடங்களிலும் அதிதிறமைச் சித்தியடைந்துள்ளார்கள்!

---

## அ. செ. மு. நிதி

எழுத்தாளர் அ. செ. முருகானந்தன் நிதிக்கு இதுவரை கிடைத்துள்ள நிதி விபரம் வருமாறு;

ஆர். ஆர். பூபாலசிங்கம், யாழ்ப்பாணம் ரூபா 251-00.

'ஈழநாடு' ஸ்தாபனம் ரூபா 251-00.

க. தர்மலிங்கம், கோண்டாவில் ரூபா 15-00.

ந. சிவபாதம் ஆனைக்கோட்டை ரூபா 100-00.

அனலை ஆறு இராசேந்திரம் ரூபா 10-00.

பார்வதிநாதசிவம், தெல்லிப்பழை ரூபா 10-00.

கோகிலா மகேந்திரன் விழிசிட்டி ரூபா 10-00.

---

## சீரணி வருடாந்த உற்சவம்

(பண்டத்தரிப்பு)

சண்டிலிப்பாய் சீரணி ஸ்ரீ நாகபூஷணி அம்மன் ஆலய வருடாந்த மஹோற்சவம் கடந்த 9-ம் திகதி வியாழக்கிழமையன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியுள்ளது. தொடர்ந்து உற்சவங்கள் நடைபெற்று இம்மாதம் 18-ம் திகதி சனிக்கிழமையன்று தேர் உற்சவமும் அன்று மாலை தீர்த்த உற்சவமும் நடைபெறவுள்ளது.

---

## விளையாட்டுப் போட்டி

(ஊரெழு)

சுன்னாகம் நாகேஸ்வரி வித்தியாசாலையின் வருடாந்த இல்ல விளையாட்டுப்போட்டி அண்மையில் நடைபெற்றது. மானிப்பாய் எம்.பி.திரு.வி. தாமலிங்கம் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார். வட்டாரக் கல்வி அதிகாரிதிரு.ச.தனஞ்சயன், வலி தெற்கு உதவி அரசாங்கஅதிபர் திரு.ஏ.ஸி செபநாயகம் உட்பட பலர்கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்கள். சுன்னாகம் பட்டனசபை விசேட ஆணையாளர் திரு பொ.பாலசிங்கம் பரிசில்களை வழங்கினார்.

---

## அரவம் தீண்டி சிறுவன் மரணம்

(யாழ்ப்பாணம்)

இனுவிலையைச் சேர்ந்த 7 வயதான த.வி ஜயகுமார் என்ற சிறுவன் அரவம் தீண்டி மரணமானான்.

பால் வாங்குவதற்கு சென்ற போது ஒழுங்கையில் பாம்பு தீண்டியதாகவும் பின் விஷக்கடி வைத்தியரிடம் சிகிச்சை செய்யப்பட்டபின்னர் மரணமானவரென்றும் கூறப்பட்டது.

யாழ்.மரண விசாரணை அதிகாரி திரு எஸ் எஸ் பிரான்சிஸ் விசாரணை நடத்திய பின்னர் விபத்து மரணம் என்று தீர்ப்பளித்தார். (கு)

---

## இலவசம்

(யாழ்ப்பாணம்)

துர்மதி வருடப்பிறப்பை முன்னிட்டு யாழ். மில்க்வைற் ஸ்தாபனத்தார் கோளறு திருப்பதிகத்தை இலவசமாக வழங்குகிறார்கள்.


ராணி (யாழ்.நகர்) தினசரி 10-30, 2-00, 6-00, 9-30
50-வது நாளை நோக்கி
★ ரஜனி காந்த் ★ ஷோபா
★ ஸ்ரீபிரியா ★ சுமன்
★ சௌகார் ஜானகி நடித்த
நீ
இலங்கை-இந்திய தயாரிப்பு

சாந்தி (யாழ்நகர்) கடைசித் தினம் 19-4-81 போன்: 7642
தினசரி 10-30, 2-30, 6-30, 9-45
திசைமாறிய பறவைகள்
20-4-81 "AUDREY ROSE"
(Color - Adults only)

மனோகரா தினசரி 4 காட்சிகள் (யாழ்ப்பாணம்)
★ சிவாஜி ★ ஸ்ரீதேவி ★ பிரமிளா
★ சுந்தரராஜன் ★ விஜயகுமார்
★ ரவிச்சந்திரன் மற்றும் பலர் நடித்த
'தீப்பொறி' பறக்கும் வண்ணப்படம்
கவரிமான்

ஸ்ரீதர் (யாழ்ப்பாணம்)
தினசரி 10-30, 2-00, 6-00, & 9-30
★ சிவாஜி ★ ஜெய்கணேஷ் ★ ஸ்ரீதேவி
★ ஜெயசுதா ★ சுந்தரராஜன் ★ சௌகார்ஜானகி
பட்டாக்கத்தி பைரவன்
(வண்ணப்படம்)

ஹவுஸ் புல்! ஹவுஸ் புல்!! ஹவுஸ் புல்!!!
ராஜா யாழ்ப்பாணம் சாந்தி மட்டுநகர்
தினசரி 10-30, 2-15, 6-15, 9-30. தினசரி: 1-30, 5-00, 9-30



பாக்கியராஜ் ● ரதி ● சரஸ்ரீ
புதிய வார்ப்புகள்
(ஈஸ்ட்மன் கலர்) வயது வந்தவர்களுக்கு உகந்தது
டைரக்ஷன்: பாரதிராஜா இசை இளையராஜா

# இலக்கிய விழாவும் நூல் வெளியீடும்

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரி அறிவழகுப் பதிப்பகம் நடத்தும் கலை இலக்கியவிழா இம்மாதம் 18ம் திகதி மாலை சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி மண்டபத்தில் நடைபெறுகிறது.

திரு. இ. சரவணபவன் (சிற்பி) தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் விசேட நிகழ்ச்சியாக கவிஞர் கல்வயல் வே. குமாரசாமியின் 'சிரமம் குறைகிறது' நூல் வெளியீடு இடம் பெறும்.

யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் கலாநிதி சு. வித்தியானந்தன் நூலை வெளியிட்டு வைக்க 'நாட்டாரிக் கலையும் நவீன கலையும்' என்னும் பொருள்பற்றி கலாநிதி அ. சண்முகதாஸ் சிறப்புச் சொற்பொழிவு நிகழ்த்துவார்.

திருவாளர்கள்: தா. இராமலிங்கம், எம். ஏ. நுஃமான், சி. மௌனகுரு ஆகியோர் ஆய்வுரை நிகழ்த்துவார்கள் (இ)

# வீட்டுக்காரர் நித்திரை; நகை, பணம் கொள்ளை!

(புலோலி)

வீட்டுரிமையாளரான பெண்மணி வீட்டில் நித்திரை செய்து கொண்டிருக்க, தங்க நகைகள், ரொக்கப்பணம், உடுபுடவைகள் உட்பட இரு பத்தாறுபிரத்து எழுநூற்றுப் பத்துரூபா கொள்ளையடிக்கப் பட்டுள்ள சம்பவம் பருத்தித் துறைப்பொலிஸ் பகுதியில் நிகழ்ந்துள்ளது.

புலோலி தெற்கைச்சேர்ந்த சிதம்பரப்பிள்ளை சிவகாமிப் பிள்ளை என்பவரது வீட்டிலேயே இத்துணிகரக் கொள்ளைச் சம்பவம் நிகழ்ந்துள்ளது.

சம்பவதினம் மாலை ஆறு மணியளவில் சோவிலுக்குச் சென்று திரும்பிய சிவகாமிப் பிள்ளை, வீட்டு அறைகளைப் பூட்டி, திறப்புகள் வைத்திருந்த தகரத்தினுள் திறப்புகள் அப்படியே இருந்ததாகவும் அன்றிரவு நித்திரைக்குச் சென்றுவிட்டு அதிகாலை எழுந்து பார்த்தபோது தகரத்தினுள் வைக்கப்பட்ட திறப்புகளைக் காணவில்லை என்றும் தேடிப்பார்த்தபோது அங்கிருந்த 2 சங்கிலி 2 சோடி காப்பு, காசு 2500 ரூபா உடுபுடவைகள் என்பன திருடப்பட்டுள்ளதாகவும் பொலிசில் முறைப்பாடு செய்துள்ளார்.

இதனைத் தொடர்ந்து பருத்தித்துறைப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி திரு எஸ். திருச்சிற்றம்பலம் சப் இன்ஸ்பெக்டர் ஜனாப் பீ எம். டூல், சார்ஜன்ட் ஜனாப் எம். ரீ எம். உவைஸ் ஆகியோரடங்கிய பொலிஸ் கோஷ்டி விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றது. (இ)

# இன்றைய பலன்

சித்திரை மாதம் 2-ம்திகதி
செவ்வாய்க்கிழமை
(14-4-1981)

மேடம்: வாழ்க்கை புதிராகத் தோன்றும். ஆசாரக்குறைவுக்கும் இடம் உண்டு சகோதரி ஒருவரின் பிரச்னை மனதிற்கு வேதனையைத் தரும். உள்வீட்டிலேயே உபத்திரவங்கள் உருவாகும். அமைதி வேண்டும்.

இடபம்: தூரதேச வாசம் உங்களைத் துயரத்தில் ஆழ்த்தும். எதிர்பாராத விபத்திற்கும் இடமேற்படலாம். ஆயுதங்களுடன் பழகுபவர்களுக்கு அவதானம் வேண்டும்.

மிதுனம்: இதயத்தில் அமைதி குன்றும். குடும்பத்தில் சிறிய பூசல் தோன்றி மறையும். குழந்தை ஒன்றின் உடல்நலம் பாதிக்கப்படலாம். உணவு விஷயத்தில் கவனம் வேண்டும்.

கடகம்: நம்பிக்கை மோசடி நடக்கும் நண்பர்களும் காலை வாரிவிடுவர். தீர்க்கமான சிந்தனையே சிறப்பைத் தரும்.

சிங்கம்: தன்மான மிகுதிக்கும் தனவரவுக்கும் இடம் உண்டு. சிலருக்கு வாகன சுகமும் கிடைக்கும். குடும்பத்தில் தென்றல் வீசும். உறவினர்கள் படையெடுத்து வருவார்கள். கல்வியில் முன்னேற்றமுண்டு.

கன்னி: உற்சாகமாக நாளை ஆரம்பிப்பீர்கள். தொழில் துறையில் முன்னேற்றமான சம்பவங்கள் இடம்பெறும். வெளியிடத்திலிருந்து வரவேற்கத்தக்க செய்தி கிடைக்கும். சிலர் வாழ்க்கையில் மகிழ்ச்சிகரமான இடமாற்றமுண்டு.

துலாம்: முயற்சியால் உயர்ச்சி உண்டு. பண விவகாரங்களில் நல்ல திருப்பங்கள் காணப்படும் வெளியிடத்தில் இருந்து நல்ல செய்தி கிடைக்கும். வீட்டில் சுபகருமங்கள் நடைபெறும் சுகயோக நாள்.

விருச்சிகம்: பணம் பறிபோகலாம், இடம் ஏற்படலாம். முகமன் பேசுவோர் விஷயத்தில் முன் எச்சரிக்கையுடன் இருக்கவும்.

தனு: சிறு விடயங்கள் கூட அதிக ஆத்திரத்தைத் தரலாம். வீணான சந்தேகங்களும் தோன்றக்கூடும். உங்களைச் சிக்க வைப்பதற்காக சூழ்ச்சி வலை விரிக்கப்படும். சிந்தித்த பின் செயலாற்றவும்.

மகரம்: சொற்சிலம்பம் ஆடுவதன்மூலம் மற்றவர்களைச் சொக்க வைப்பீர்கள். சிலர் தேர்தல் விவகாரங்களில் ஈடுபடலாம். குடும்பத்தில் அமைதி நிலவும். பெரியவர்களுடன் உறவுகள் பலப்படும்.

கும்பம்: வெளியிடத்துப் பயணம் வேதனையைத் தரலாம். வேண்டாத உறவுகளைத் துண்டித்தல் நன்று. நிதானம் வேண்டும்.

மீனம்: பந்த பாசம் உங்களைப் பரவசப்படுத்தும். உறவினர்கள் உங்களை உற்சாகப் படுத்துவார்கள் கல்வித்துறையில் அதிக ஈடுபாடு ஏற்படும். இலக்கிய வட்டத்தில் சஞ்சரிப்பவர்களுக்கு இனிமையான தினம்.

சோதிடக் கலாநிதி
திருமலை
க. வேலுப்பிள்ளை

ஹரன் யாழ்ப்பாணம்
தினசரி 4 காட்சிகள்



ரஜனிகாந்த்—ஷோபா
நடித்த
முள்ளும் மலரும்
போன்: 331 (கலர்)

நாகம்ஸ் (கல்முனை)
தினசரி 6-30, 9-30
இன்று பகல்
மெட்னிக் காட்சியுண்டு
எம். ஜி. ஆர்.-லதா
மீனவநண்பன்
(ஈஸ்மன் கலர்)

வெஸ்லி
(சாவிப்பாளி)
தினசரி 6-15, 9-30,
சனி, ஞாயிறு 2-30
சிவாஜி—கே. ஆர். விஜயா
தாய்



தவக்கால நற்சிந்தனை

## "ஏலி, ஏலி லெமா சபக்தானி"

"அதாவது என் கடவுளே என் கடவுளே ஏன் என்னைக் கைவிட்டீர்" (மத். 27/46) நம் ஆண்டவராகிய இயேசுக் கிறிஸ்து சிலுவையில் தொங்கிக் கொண்டிருக்கும் வேளையில் இந்த வசனத்தை உச்சரித்தார். இவ்வசனம் 21ம் சங்கீதத்தின் ஆரம்ப வசனமாகும். சங். 21ல் சங்கீத ஆசிரியர் கிறீஸ்து அனுபவிக்கும் பாடுகளை ஏற்கனவே கூறிவைத்துள்ளார். ஆசிரியர் கூறி வைத்த இறைவாக்கு இன்று கிறீஸ்துவில் நிறைவேறுகின்றது.

சங்கீதத்தின் ஆரம்ப வசனம் கடவுளே கைவிட்டுவிட்டார் என்ற நிலையை எடுத்துக்காட்டுகின்றது. அதாவது இயேசு எல்லாராலும் கைவிடப்பட்டு தனிமையை அனுபவித்தார் என்பதை எடுத்துக்காட்டுகின்றது. தனிமை என்பது மிகவும் கொடிய ஒரு துன்பம். இத்துன்பத்தையும் இயேசு அனுபவித்தார். இன்றும் தனிமை அனுபவிக்கின்ற எத்தனையோ மனதருடைய தனிமையில் அவர் பங்குகொண்டார். அவர் இவ்வாறு பங்குகொண்டதானது அவர்களுக்கு ஆறுதலாக உள்ளது. அடுத்து இயேசு கிறிஸ்து இறுதி மூச்சுவிடும் வரை தந்தையின் சித்தத்தையே நிறைவேற்றினார். நாமும் அவர் விருப்பப்படி வாழவேண்டும்; அப்படி வாழ்வது எமக்கு மன மகிழ்வையே இறுதியில் தந்துவிடும் என்ற கருத்து உணர்த்தப்படுகின்றது.

—அருட்திரு மேரி பஸ்ரியன்

வின்ஸர் தினசரி 5 காட்சிகள்
(யாழ்ப்பாணம்)
காட்சிகள் முன்கூட்டியே ஆரம்பிக்கப் படுவதால் நேரம் குறிப்பிட முடியாமைக்கு வருந்துகிறோம்.
விசாரணைக்கு அப்பாற்பட்ட விஷயங்கள் வீட்டிற்குள் வரும்போது நியாயங்கள் வீதிக்கு வருகின்றன! தாய்க்கு குற்றம் குற்றமே என்று சொன்ன அந்தக் குலமகள் குற்றங்கள் செய்யத் தயாரானாள். அப்போ கோமகன் என்ன செய்தான்? ... பாருங்கள் புரியும்
★ சிவாஜி கணேசன் ★ கே. ஆர். விஜயா
★ தேங்காய் சீனிவாசன் ★ மனோரமா ★ சுந்தரராஜன்
★ சுருளிராஜன் மற்றும் பலர் திறம்பட நடித்த
"ரிஷிமூலம்"
டைரக்ஷன்
எஸ். பி.
முத்துராமன்
(ஈஸ்ட்மன் கலர்)

வெலிங்டன்
(யாழ்நகர்)
தினசரி 4 காட்சிகள்
வல்லவன் ஒருவன்

லிடோ
(யாழ்நகர்)
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி கணேசன்-விஜயா
தங்கை
(புதிய பிரதி)

டில்கா
ரேடியோ அன் ரீ.வி டெக்னீஷியன்ஸ் பஸ்நிலையம் எதிர்மேல்மாடி



உங்கள்
ரேடியோக்கள்
டேப்றெக்கோட்டர்கள்
மின்சார உபகரணங்கள்
தொலைக்காட்சிப் பெட்டிகள்
எதுவாகிலும்
உடன் சிரமைத்துக் கொள்ள,

202, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.



# ஈழநாடு
The Eelanaadu
60 சதம்


## இயந்திரப் படகுகள் உதவி

(மண்முனை)

மட்டக்களப்பு மீன்பிடிப் பயிற்சிக் கல்லூரியில் பயிற்சி பெற்று வெளியேறிய இளைஞர்களில் முப்பது இளைஞர்களுக்கு மீனவர் கடனுதவித் திட்டத்தின் கீழ் இயந்திரப்படகுகள் கடற்றொழில் அமைச்சினால் வழங்கப்பட இருக்கின்றன.

இப் படகுகளில் நான்குபேர் ஆழ்கடலுக்குச் சென்று மீன் பிடிப்பதற்கான சகல வசதிகளும் உண்டு.


நியூ கேம்பிறிட்ஜ்
மேல்மாடிக் கட்டிடம்
திருநெல்வேலிச் சந்தி
புதிய G. C. E. (A/L) 82/83
வர்த்தகம், விஞ்ஞானம்
தாவரவியல் - சிவவீரசிங்கம், விலங்கியல் - ஜெகானந்தகுரு, பௌதிகம்! விமல்ராஜ், இரசாயனம்! அன்ரன் மாஸ்ரர்,
கணக்கியல்; பாலா மாஸ்ரர், தூயகணிதம், பிரயோககணிதம் - பிரபல ஆசிரியர்.
ஆரம்பம்: 14-4-81


# இந்தத்தலைமுறையில் ஈழம்கண்ட சான்றோன்

(கடந்த சனிக்கிழமை பரிபூரண நிலை எய்திய நல்லை ஞானசம்பந்தர் ஆதீன குருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத ஞானசம்பந்த பரமாச்சார்ய சுவாமிகள் ஞான பீடமேற்ற 13வது ஆண்டையொட்டி கடந்த 19.9ம் ஆண்டு தவத்திரு குன்றக்குடி அடிகள் சுவாமிகள் பற்றி அனுப்பிய செய்தியின் சுருக்கம் இங்கே தரப்படுகின்றது)

நாடு பலரைக் காண்கின்றது. ஆனால் மிகச் சிலரே நாட்டைக் காண்கின்றனர். மனித குலத்தின் வரலாறு இடையீடின்றி தொடர்ந்து எழுதப் பெற்றுவருவது முன்னர்கூறிய பலரால் அல்ல. பின்னர் எடுத்துக்கூறிய சிலராலேயாம். பலர் ஆர்ப்பரிப்பர். மனத்தது மாசாக மாண்டார் நீராடி மறைந்தொழுகுவர். அவர்களுடன் தவத்தின் கோலம் கொண்டிருந்தாலும் அவர்கள் வெளிப்படுத்தும் ஒலி, தவத்தினைச் சார்ந்ததாக இருந்தாலும் அத்தனையும் காகிதம் பயனற்றவை. அவர்களின் நெஞ்சங்கள் அன்புத் தவத்தில் ஈடுபடுவதில்லை. தவநெறியில் நிற்பதில்லை. ஆன்மநேய ஒருமைப்பாட்டுக்கும் அவர்களுக்கும் நெடுந்தொலைவு. ஆயினும் "இம்" என்றால் நூறுதடவை உலகம் பற்றிப் பேசுவர். எல்லாம் சிறுபிள்ளை விளையாட்டு. விளையாட்டு ஆதலால் ரசிப்பவர்கள் பலர் கூடுகின்றனர். இந்தத் திசையிலிருந்து நாட்டை உள்ளவாறு கண்டு உணர்ந்து நன்னெறிக்கண் உய்த்து செலுத்துவோரே உயர்ந்தோர்.

இத்தகு சான்றோர் வரிசையில் இந்தத் தலைமுறையில் ஈழத்தில் ஒருவரை நாடு கண்டது இல்லை, நாடு தந்தது அவர்கள் கண்டனர் நாட்டை. ஏழாம் நூற்றாண்டில் வேதநெறி தழைத்தோங்க திரு. ஞானசம்பந்தர் தோன்றினார். ஆனாலும் திருஞானசம்பந்தரின் தோற்றத்தால் வேதநெறியிலும் விழுமிய பயன்பெற்றது. மிகு சைவத்துறையே திருஞான சம்பந்தர் தன்னைத் தமிழ் ஞானசம்பந்தன் என்று சொல்லிச் சொல்லிப் பெருமைப்படுகின்றார். நற்றமிழ் ஆரூரர் திருஞானசம்பந்தர் செய்ததொண்டினைப்பாராட்டி அவரைத் தமிழ்த்தொண்டர் என்று கூறுகின்றார் நாளும் இன்னிசையால் தமிழ் பரப்பும் ஞானசம்பந்தன் என்பது சுந்தரரசர் திருவாக்கு பழங்காலத்தில் தமிழ் மொழியின் அளவாக மட்டுமல்லாமல் அதுவே நெறியாகவும் முறையாகவும் விளங்கியது. அதனாலன்றோ "செழுந்தமிழ் வழக்கே அயல் வழக்கின் துறைவெல்ல" என்று சேக்கிழார் அருளிச்செய்தார். இன்று திருஞானசம்பந்தர் திருப்பெயரில் திருஞானசம்பந்தரின் திருவருள் நோக்குப் பதித்த ஈழத்தில், நல்லூரில் நன்றுடையான் புகழ்பாடும் நல்லைஞானசம்பந்தர் ஆதீனத்தை அமைத்துத் தமிழ்த் தொண்டும் சைவத் தொண்டும் ஆற்றிவருகின்றார் ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத ஞானசம்பந்த தேசிகபரமாச்சாரிய சுவாமிகள்

## தவத்திரு குன்றக்குடி அடிகள்

## வர்த்தகத்தில் இளைஞர் பயிற்சி

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்ட இளைஞர் யுவதிகளுக்கான 'வர்த்தகத்தில் இளைஞர் பயிற்சி, இம்மாதம் 20ம் திகதி கிளிநொச்சி மகாவித்தியாலயத்தில் தேசிய இளைஞர் சேவை மன்றத்தினால் நடாத்தப்படவுள்ளது

20ம் திகதி ஆரம்பித்து 26ம் திகதிவரை நடைபெறவுள்ள இவ் 'வர்த்தகத்தில் இளைஞர் பயிற்சி'யில் யாழ் மாவட்டத்தைச் சேர்ந்த தெரிவு செய்யப்பட்ட முப்பது இளைஞர்களும், யுவதிகளும் கலந்துகொள்ளவுள்ளனர்.

இப்பயிற்சியை முடிக்கும் இளைஞர்களும், யுவதிகளும் சுயதொழில்களை மேற்கொள்வதற்குப் பணவசதி அற்றவர்களாக இருந்தால் வங்கிகள் மூலம் கடனுதவி பெற்றுக்கொள்ள வசதிகள் செய்து கொடுக்கப்படுமென்றும் இப் பயிற்சிநெறிக்குப் பொறுப்பான இளைஞர் சேவை மன்ற அலுவலர் செல்வி மகேஸ்வரி செல்லத்துரை தெரிவித்தார். (புலோலி நி. ஈ)

## ஆசிரியர்கள் ...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பிரேமதாசா கூறியதைத் தொடர்ந்தே பல ஆசிரியர்கள் ஓய்வு பெறுவதற்கு முன்வந்துள்ளனர்.

ஆசிரியர்களின் இடமாற்றம், பதவி உயர்வு ஆகியன கடந்த நான்கு ஆண்டுகளாக ஒரு சீரான முறையில் நடைபெறுமையினாலேயே விரக்தியடைந்த நிலையில் ஓய்வுபெறதாம் முன்வந்துள்ளதாக அவர்கள் தமது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளனர்

இதேவேளையில் இப்புதிய திட்டத்தின்படி பென்சன் பெறுவதற்கான சுற்று நிருபத்தை உடனடியாக அமுல்படுத்துவதற்கு பொது நிர்வாக அமைச்சிற்கு சிபாரிசு செய்யுமாறு பிரதமர் ஆர். பிரேமதாசாவிடம் வவுனியா மாவட்ட இலங்கைத் தமிழ் ஆசிரியர் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது. (இ)

## வடபகுதி...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கொள்ளையின்போது சம்பவம் நடந்த இடத்தில் நின்றார் என்பது பொது மக்களின் வாக்குமூலங்கள் மூலம் பொலிஸாருக்கு தெரியவந்திருக்கிறது.

நீர்வேலி கொள்ளைத் திட்டம் தொடர்பான முக்கிய தகவல்களை சுமார் 30 பேர் பொலிஸாருக்குத் தெரிவித்துள்ளனராம்.

குரும்பசிட்டி அடவுகடை கொள்ளையில் ஒரு பகுதி கொழும்பிலுள்ள சில நகைக் கடைகளில் விற்பனை செய்யப்பட்டிருக்கலாம் என்ற தகவல் தற்போது வெளியாகியுள்ளது சில நகைகள் அடவு வைக்கப்பட்டிருக்கலாம் என்ற தகவலும் வெளியாகியுள்ளது

நீர்வேலி 81 லட்சம் ரூபா கொள்ளையில் சுமார் ஒரு லட்சம் ரூபா மட்டுமே இவர்கள் செலவு செய்திருக்கலாம் எனவும் மிகுதி 80 லட்சமும் பதுக்கி வைக்கப்பட்டிருக்கலாம் என பொலிஸார் நம்புகின்றனர்.

## விறகுத் தட்டுப்பாடு

(புலோலி)

பருத்தித்துறைப்பகுதியில் விறகுக்கு கடுமையான தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது!

இவ்விறகுத்தட்டுப்பாட்டை நீக்குவதற்கு உடனடி நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு பாவனையாளர்கள், பருத்தித்துறைப் பாவனையாளர் சங்கத்திடம் கோரியுள்ளனர்.

## நான்கு இளைஞர்கள்

நீர்வேலிக் கொள்ளையின் போது நான்கு இளைஞர்கள் மோட்டார் சைக்கிளில் கண்காணிப்புச் செய்து வாகனங்களை திசைதிருப்பிவிட்டனர் என்று கூறப்படுகிறது. இந்த நான்கு வாலிபர்கள் பற்றி தகவல் அறிவதிலும் பொலிசார் ஈடுபட்டுள்ளனர்.

குட்டிமணி ஒரு கடத்தல் மன்னன் என்றும், இவர் சர்வதேச கடத்தல் மன்னர்களின் இலங்கை ஏஜெண்டாக இருந்தவர்தார் என்பதும் விசாரணையில் தெரியவந்திருக்கிறது.

# சூறாவளிக்கு 25 பேர் பலி!

புதுடில்லி, ஏப். 13

பங்களாதேஷில் இன்று வீசிய சூறாவளிக்காற்றினால், இருபத்தைந்து பேர் பலியானார்கள்? நூற்றுக்கும் அதிகமானவர்கள் காயமடைந்துள்ளனர். பாடசாலைக் கட்டடம் ஒன்று இடிந்துவிழுந்ததில் பத்துப் பேர் பலியானார்கள்.

## விண்வெளிக் கப்பல் இன்று தரையிறங்கும்

வாஷிங்டன், ஏப். 13

அமெரிக்க விண்வெளிக் கப்பலான 'கொலம்பியா' வில் வலம் வந்துகொண்டிருந்த அமெரிக்கவீரர்கள் ஜோன்யங், றொபர்ட் கிறிப்பின் ஆகிய இருவரும் இன்று செவ்வாய்க் கிழமை கலிபோர்னியா பாலைவனத்திடலில் தரையிறங்குவார்கள்.

'கொலம்பியா' விலிருந்து இரண்டுவீரர்களும் முதற் தடவையாக பூமிக்கு அனுப்பி வைத்த செய்தியில், தங்களது விண்வெளிப்பயணம் மிகுந்த பரவசமூட்டுவதாக உள்ளது என்று மகிழ்ச்சி தெரிவித்திருந்தனர்.

திட்டமிட்டபடி 36 தடவைகள் பூமியை வலம்வரும் இரண்டு வீரர்களும், தங்களது கப்பலை, விமானத்தை இறக்குவது போன்று தரையில் இறக்கி புதிய சாதனையை நிலைநாட்டுவார்கள்.

## பெறுமதியற்ற 'செக்' கொடுத்து ரூ. 25,000 மோசடி!

### நபருக்கு பிடிவிறாந்து

(யாழ்ப்பாணம்)

பெறுமதியற்ற காசோலையைக் கொடுத்து இருபத்தைந்தாயிரம் ரூபாவை வாங்கிக்கொண்டு நம்பிக்கை மோசடி செய்த நபரொருவருக்குப் பிடிவிறாந்து பிறப்பிக்கப்பட்டுள்ளது.

பருத்தித்துறையைச் சேர்ந்த ஒருவருக்கு சுபுரத்தைச் சேர்ந்த ஏ. கேதீஸ்வரன் என்பவர் 25,000 ரூபாவுக்கான சுன்னாகம் இலங்கை வங்கிக் காசோலை ஒன்றைக் கொடுத்து காசைப் பெற்றுக்கொண்டாராம். பருத்தித்துறையைச் சேர்ந்த காசோலையைப் பெற்றவர் அதனை வங்கியிலிட்டபோது காசோலைக்குரிய கணக்கு வங்கியில் மூடப்பட்டுவிட்டதாகத் தெரிவிக்கப்பட்டு காசோலைவங்கியால் மறுக்கப்பட்டுவிட்டதாம்.

இதனைத் தொடர்ந்து காசோலையைப்பெற்ற நபர் பருத்தித்துறை நீதிமன்றத்தில் வழக்கொன்றைத் தாக்கல் செய்திருந்தார். ஆனால் இச்சந்தேகநபர் நீதிமன்றத்தில் ஆஜராகியிருக்காததால் நீதவான் திரு கே. எஸ். மகேசன் சந்தேகநபருக்குப் 'பிடிவிறாந்து பிறப்பித்தார். (அ)

அனலைதீவு

## 5 ஆலயங்களில் சமத்துவ வழிபாடு

(யாழ்ப்பாணம்)

"ஊர்காவற்றுறைத்தொகுதியிலுள்ள அனலைதீவுப் பகுதியில் சமத்துவ வழிபாட்டுக்கு அனுமதியளிக்கப்படாமல் இருந்த ஐந்து இந்து ஆலயங்களிலும் சமத்துவ வழிபாட்டுக்கு எவ்வித தடையுமில்லை' என அனலைதீவு ஐயனார் கோவில் செயலாளர் திரு. வே. மயில்வாகனம் சாவகச்சேரி எம். பி.க்குக் கடிதமூலம் தெரிவித்துள்ளார்.

## 50 லட்சம்...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

"நகரில் 1488 பேருக்கு புதிதாக மின்சார இணைப்பு வழங்கப்பட்டிருக்கிறது. தற்காலிகமாக 546 பேருக்கு மின் இணைப்பு வழங்கப்பட்டிருக்கிறது.

"ஆரியகுளம், ஆஸ்பத்திரி வீதி, ஸ்ரான்லிவீதியில் புதிய உபமின்நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

## முருகன்கோவிலுக்கு முஸ்லிம் பிரமுகர் உதவி

(சுழிபுரம்)

மலேசியாவில் வாழும் இலங்கை முஸ்லிம் பிரமுகரான ஜனாப் அப்துல் மஜீத் பண்ணாகம் விசவத்தனை முருகமூர்த்தி கோவில் உள்வீதி சுற்றுமண்டபத்தைசுமார் 2லட்சம் ரூபா செலவில் கட்டிக் கொடுப்பதற்கு முன்வந்துள்ளார், இவர் தமது தாயாரின் நினைவாக இப்பணியைச் செய்யவுள்ளார். அண்மையில் மலேசியா சென்று திரும்பிய பண்டிதர் அ. ஆறுமுகத்திடம் ஜனாப் மஜீத்திடம் இது தொடர்பாக உறுதியளித்துள்ளார். (இ)

இப்பத்திரிகை ஈழநாடு லிமிடெட் [illegible] ஏப்பிரல் 14-ம் திகதி வெளியிடப்பட்டது: Registered as a News Paper at the General Post Office Sri Lanka under No. QP [illegible]/78 The Eelanaadu [illegible] 9, Telegram: "Eelanaadu" Phone: 689 : 8128